KANTON AARGAU

hallo — aargau.ch

# சேர்ந்து வாழுதலும் குழந்தைகளும்


சேர்ந்து வாழுதல்
பெற்றோரின் உரிமைகளும் பொறுப்புகளும்
பெற்றோராயிருத்தல்
பிள்ளைகள் பராமரிப்பு
குடும்பம் ஒன்றிணைதல்
மோதல்

# சேர்ந்து வாழுதல்

சுவிஸில் பலவிதமான சேர்ந்து வாழும் வாழ்க்கை முறைகள் ஏற்றுக் கொள்ளப்படு கின்றன. மணம்முடிப்பதற்கு 18 வயதை அடைந்திருக்க வேண்டும். வரும் துணையும் சட்டப்படி அதே போல இருக்கவேண்டும்.

## ஒன்றாக வாழுதல்

சுவிஸில் ஒரு நூற்றாண்டுக்கு முன்பிருந்த ஒன்றாக வாழும் முறையை விட தற்போது மிகவும் மாறியுள்ளது. அதிகமான சோடிகள் மணம்முடிக்காமலே (வைப்பாட்டி, Konkubinat) குழந்தைகளைப் பெற்று சேர்ந்து வாழ்கின்றனர். இவர்களுக்கிடையில் கணவன்/மனைவி என்ற இறுக்கமான கட்டுப்பாடுகள் இல்லை. அதே சமயம் ஒரே பாலினத்தவர் சேர்ந்து வாழுதலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## திருமணம் ஃ பதியப்பட்ட சேர்ந்து வாழுதல்

சுவிஸில் 18 வயதானால் தான் திருமணம் முடிக்கலாம். யார் மணம்முடிக்க விரும்புகிறாரோ அவர் வதியும் கிராமசபைக்குப் பொறுப்பான பிரதேசப் பதிவாளர் அலுவலகத்திற்குச் (Regionales Zivilstandsamt) சென்று அறிவிக்கவேண்டும். அங்கு பதிவாளர் அலுவலகம் திருமண ஆயத்த நடைமுறையைத் தொடக்கி வைக்கும். இதன் போது மணம்முடிக்க விரும்புபவரின் துணையும் திருமண பந்தத்திற்கு ஏற்றவரா எனச்சரி பார்க்கப்படும். இந்த ஆயத்த நடைமுறை நடைபெற்று முடிந்து 3 மாதத்திற்குள் திருமணம் நடைபெறவேண்டும். அதற்குப் பொறுப்பான பதிவாளர் அலுவலகம் திருமண செயற்பாட்டிற்குத் தேவையான பத்திரங்களின் தகவலைத் தரும். மணம்முடிக்கப் போகும் துணை வெளிநாட்டிலிருந்தால் சுவிஸ் நாட்டிற்குள் வருவதற்குரிய அனுமதியைக் கேட்டு திருமண ஆயத்த நடைமுறையின் போது விண்ணப்பிக்க வேண்டும். ஒரே பாலினத்தவர் மணம்முடிக்கும் போதும் உரிமைகளும் கடமைகளும் வழமையான திருமணம் போன்றே இருக்கும்.

## உரிமைகளும் பொறுப்பும்

கணவன் மனைவி இருவருக்கும் சட்டப்படி ஒரேயளவு உரிமையும் பொறுப்பும் உள்ளது .இருவரும் தத்தமது சொந்த விருப்பத்தின் பேரிலேயே மணம்முடிக்க வேண்டும். யாரையாவது வற்புறுத்தி திருமணத்திற்கு உடன்படுத்தியதாக (Zwangsheirat) நிர்வாகப் பணிமனைகள் அறிய நேர்ந்தால் இந்த திருமணபந்தம் செல்லுபடியாகாமல் போவதுடன் வற்புறுத்தியவரைச் சட்டம் தண்டித்துத் தீர்ப்பளிக்கும்.எவர் ஒருவர் தம்மை திருமணத்திற்கு வற்புறுத்துவதாக உணருகிறாரோ உடனடியாக உதவி கோர வேண்டும்.அறோ மாநிலத்தில் விசேட தொ.பேசி (062 835 47 90) இல் அழைக்கவும்.

## குடும்பத்தைத் திட்டமிடல்

குடும்பத்திட்டமிடல் கர்ப்பம் பாலியல் சம்பந்தமான கேள்விகள் இருப்பின் அறோ மாநிலத்தின் யுயசயரஇ டீசரபப ஆலோசனை நிலையங்களை அணுகலாம். இந்த சேவைகள் இலவசம். நம்பிக்கையானவை. இங்கு கருத்தடை முறைகள், பாலியல் நோய்கள், விருப்பமின்றிய கர்ப்பம் அல்லது பாலியல் நோய்கள் பற்றிப் பேசலாம். இங்கு பிள்ளைகளுள்ள பெற்றோரும் பெற்றோராகப்போகப்போபவர்களும் போகலாம்.

## விவாகரத்து

விவாகரத்து கணவன் மனைவி இருவருமாக இணைந்து அல்லது ஒருவர் மூலம் மட்டும் கோரப்படலாம். பிரதேச குடும்ப நீதிமன்றமே (Familiengericht) இதற்குப் பொறுப்பாகும். வெளிநாட்டில் மணம் முடித்தவர்களும் சுவிஸ் சட்டப்படி இங்கு விவாகரத்துப் பெறலாம். இதற்கு சுவிசில் ஒரு ஏற்றுக்கொள்ளக்கூடிய வாழ்க்கைத்தராதரத்தில் குறைந்தது 1வருடமாவது வாழ்ந்திருக்க வேண்டும். விவாகரத்து, குடியிருப்பு நிலை அல்லது அப்போது நடைமுறையிலிருக்கும் பிராஜாவுரிமைகோரல் நடைமுறையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். விவாகரத்து பெற்ற வெளிநாட்டவர் சுவிசில் தொடர்ந்தும் வாழ்வதற்கு பலவிதமான நிபந்தனைக்கு உட்படவேண்டும். குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பு விதிகள் பொருந்தும். விவாகரத்து பற்றிய தகவல்களை வாழ்க்கைத்துணை- மற்றும் குடும்ப ஆலோசனை நிலையம் அல்லது ஒரு சட்ட ஆலோசனை நிலையத்தில் பெறலாம்.

### மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

dev.hallo-aargau.ch/ta/partnership-and-children/partnership

# பெற்றோரின் உரிமைகளும் பொறுப்புகளும்

குழந்தை பிறந்தவுடன் உடனே பதிவாளர் அலுவலகத்தில் பதியவேண்டும். மணம் முடிக்கும் போதே உறவுகளுக்கான உரிமை ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதால், மணம் முடிக்காத பெற்றோர், தாமாக இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

## பிறப்பைப் பதிதல்

ஒவ்வொரு குழந்தையும் பிறந்தவுடன் அதன் பிறப்பைப் பிரதேச பதிவாளர் அலுவலகத்தில் (Regionales Zivilstandsamt) பதியவேண்டும் கவனம்: பதிவாளர் அலுவலகம் குழந்தை பிறந்த இடத்தைப் பொறுத்து இருக்குமே தவிர பெற்றோர் வாழும் கிராமத்தைப் பொறுத்து இருக்காது. குழந்தை ஒரு வைத்தியசாலையில் பிறந்திருந்தால் அவ் வைத்தியசாலையே தமக்குரிய பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பைப் பதியும். குழந்தைப் பிறப்பு வைத்தியசாலையில் நடக்காமல் (உதாரணத்திற்கு வீட்டில் ) இருந்தால் பிள்ளை பிறந்து 3 நாட்களுக்குள் பிறப்பை தாமாகப்பதிய வேண்டும். பதிவாளர் அலுவலகம் தேவையான பத்திரங்களை அறியத்தரும். சுவிஸில் பிறக்கும் பிள்ளைகளுக்கு சுவிஸ் குடியுரிமை தானாகவே கிடைக்காது.

## தந்தைக்கான அங்கீகாரம்

மணம் முடித்தவர்கள் குழந்தை பெற்றால் கணவனின் பெயரே தந்தை எனப் பதியப்படும். கணவன். குழந்தை தனக்குரியதில்லை எனச் சந்தேகித்தால் சட்டப்படி மேன்முறையிடலாம். பெற்றோர் மணம் முடிக்காவிட்டால் பிள்ளையின் தந்தை பெயர் தானாகவே பதியப்படாது. தந்தை குழந்தை பிறக்க முன்போ அல்லது பிறந்த பின்போ தான் வதியும் கிராமசபைப் பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்று தானே தந்தை எனப் பதியவேண்டும். குழந்தையின் தந்தை தன் குழந்தை தான் என அங்கீகரிக்கத் தவறினால் தாய் நீதிமன்றத்திற்குச் சென்று அங்கீகாரம் தேடலாம்.

## பெற்றோரின் அக்கறை

தமது பிள்ளைகளின் நலம் பற்றிய கடமையும் பொறுப்பும் பெற்றோருக்கு உண்டு (elterliche Sorge). உதாரணத்திற்கு இதனுள் அடங்குவது வளர்ப்பு அல்லது நிதி ஆதரவு. பிள்ளைகள் 18 வயது வரும் வரை சட்டப்படி பெற்றோரே பொறுப்பாகும். பெற்றோர் மணம் முடித்திருந்தால் சட்டப்படி இந்தக் கடமையும் பொறுப்பும் இருவருக்கும் தானாகவே வரும். பெற்றோர் மணம் முடிக்காவிடின் முதலில் தகப்பன் தன் பிள்ளையென ஏற்றுக் கொண்ட பின்பு தான் தாய் தந்தை தாமிருவரும் சேர்ந்து பெற்றோரின் பொறுப்பை (gemeinsame elterliche Sorge) ஏற்றுக்கொள்வதாக எழுத்து மூலம் கொடுக்கவேண்டும். இதைப் பிள்ளையை ஏற்றுக் கொள்ளும் போது பிரதேசப் பதிவாளர் காரியாலயத்திலோ அல்லது பின்பு பிள்ளைகள் பாதுகாப்பு நிர்வாகம் (Kindesschutzbehörde, KESB) பிரதேச குடும்ப நீதிமன்றிலோ செய்யலாம். மணம் முடிக்காத பெற்றோராயின் அவர்களுக்கிடையில் பிள்ளையின் பொறுப்பு விடயத்தில் ஒத்துவராவிடின் பிள்ளைகள் பாதுகாப்பு நிர்வாகம் தான் அதை முடிவு செய்யும். ஏதாவது கேள்விகள் இருப்பின் அல்லது உதவிகள் தேவைப்படின் அதற்கென உள்ள ஆலோசனை நிலையங்களை நாடலாம்.

KANTON AARGAU

hallo — aargau.ch

## பராமரிப்பு

பெற்றோர் பிரிந்திருந்தாலும் பிள்ளையைப் பராமரிக்கும் (பராமரிப்பு, Unterhalt) கடமைப்பாடு இருவருக்குமே உண்டு. அதற்காக அவர்கள் பிள்ளையைப் பராமரிக்கும் செலவுகள் பற்றி கலந்து பேசி ஒழுங்குக்கு வர வேண்டும். பராமரிப்புச் செலவுகளை தாய் தந்தை இருவருமே பங்கிடவேண்டும். ஒவ்வொருவரும் எவ்வளவு காசு கட்ட வேண்டும் என்பது அவரவர் பொருளாதார நிலையிலும் பிள்ளையின் பராமரிப்பில் எவ்வளவு பங்கெடுக்கிறார்கள் என்பதிலும் தங்கியுள்ளது. எதற்கும் ஒரு சரியான முடிவுக்கு ஒத்துவராவிடின் நீதிமன்றத்திற்குப் போகலாம். பணம் செலுத்தவேண்டிய பெற்றோரில் ஒருவர் பணம் செலுத்தாவிடின் வதியும் கிராமசபையில் உதவி கேட்டு விண்ணப்பிக்கலாம் (Alimentenbevorschussung).

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

dev.hallo-aargau.ch/ta/partnership-and-children/parents-rights-and-duties

# பெற்றோராயிருத்தல்

ஒரு பிள்ளையை வளர்த்தெடுப்பது முக்கிய கடமையாகும். அதிகமான பெற்றோர் அடிக்கடி கேட்கும் கேள்வி அவர்கள் பிள்ளைகளுக்கு எது நல்லது என்பதே. இது பற்றி மற்றைய பெற்றோருடன் கருத்துப்பரிமாறுவது மிகவும் பிரயோசனமானது. அதைவிட பல விதமான ஆலோசனை நிலையங்களும் உதவிசெய்யும்.

## சந்திக்குமிடங்கள்

தாய் தந்தையருக்கு மற்றைய பெற்றோருடன் கருத்துப் பரிமாறுதல் அல்லது விரும்பினால் பிள்ளையுடன் சேர்ந்து செயற்பாடுகளில் பங்குபற்றுதல் போன்ற பரந்த வசதிகள் உள்ளன. சுவிஸ் மற்றும் வெளிநாட்டுப் பெற்றோர் சேர்ந்து தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக சில விசேட வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

- பால் குடிக்கும் மற்றும் 2 வயது வரையுள்ள சிறு குழந்தைகளுக்குமாகக் கிராமசபைகள் கிறாபல் குறூப் (Krabbelgruppen) இங்கு பெற்றோர்கள் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளலாம்.
- பெற்றோர் - பிள்ளைகள் உடற்பயிற்சி (MuKi-/VaKi-/ElKi-Turnen) இங்கு விளையாட்டு அதனால் மகிழ்ச்சி பெற்றோருக்கும் சிறு குழந்தைகளுக்குமான உடலசைவுகள் என்பன நடக்கும். இந்த உடற்பயிற்சியை அதிகமாக கிராமசபைகளே நடத்தும்.
- குடும்பமையம் (Familienzentrum) இங்கு பெற்றோர் குழந்தைகளுக்கான பல விதமான நிகழ்ச்சிகள் நடைபெறும்.
- நூலகங்கள் சிறிய மற்றும் வளர்ந்த பிள்ளைகளுக்காகவும் பெற்றோருக்காகவும் உரிய வசதிகளை செய்திருக்கின்றன.

வதியும் கிராமசபைகளில் அந்தப் பிரதேசத்திற்குரிய பலவேறு வசதிகளைப்பற்றி அறியலாம். அது எப்போதும் பிரயோசனப்படும்.

## பெற்றோர் கல்வி

அறோ மாநிலத்தில் பெற்றோர் பலவிதமான வகுப்புகளுக்குப் போகலாம். வெளிநாட்டவர்களின் விசேடமான தேவைகளுக்காகவும் வகுப்புகள் உண்டு. உதாரணத்திற்கு சுவிஸ் கல்வித்திட்டம் பற்றிய வகுப்பும் உண்டு. ஒரு சில வகுப்புகள் வெளிநாட்டு மொழிகளிலும் நடக்கிறது. இந்த அனைத்து வசதிகள் பற்றியும் இணையத்தளப் பக்கம் "Elternbildung Aargau" பாடசாலைகள் அல்லது கிராமசபைகளில் காணலாம்.

## வளர்ப்பு பற்றிய ஆலோசனை

பிள்ளை வளர்ப்புப் பற்றிய ஆலோசனை தேவைப்படுபவர்கள் பல விதமான ஆலோசனை நிலையங்களை நாடலாம். எல்லாப் பிரதேசங்களிலும் குடும்ப ஆலோசனை நிலையங்கள் உள்ளன. தாய் - தந்தை ஆலோசனை (Mütter- und Väterberatung) இது பல கிராமசபைகளிலும் பால் குடிக் குழந்தைகளின் பராமரிப்புக்கு உதவும். பெற்றோர் அவசரத்திற்கு ஆலோசனை பெற தொலைபேசி மூலம் அல்லது ஈ மெயில் (தொ.பேசி 0848 35 45 55 ( சாதாரண கட்டணம் )www.elternnotruf.ch).

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

dev.hallo-aargau.ch/ta/partnership-and-children/being-a-parent

# பிள்ளைகள் பராமரிப்பு

குழந்தை பிறந்த பின்பு அநேகமாகத் தாய் தந்தை இருவருமே வேலைக்குச் செல்கின்றனர். அதற்காகத்தான் அறோ மாநிலத்தில் குழந்தைப் பராமரிப்பு வசதிகள் உள்ளன. இது கட்டணச்சேவையாகும்.

## குழந்தைகள் பகல் நேரப் பராமரிப்பகம்

பகல் நேரம் முழுவதும் குழந்தைகளைப் பராமரிப்பது குழந்தைகள் பகல் நேரப் பராமரிப்பகம் (Kinderkrippen). இங்கு 3 மாதம் தொடக்கம் பாடசாலை வரையுள்ள பிள்ளைகள் ( பாடசாலைக்கு முன்னும் பின்னும் மற்றும் மதியமும்) பராமரிக்கப் படுவார்கள். இங்கு இடம் கிடைக்க நீண்ட காலம் காத்திருக்கவேண்டியிருப்பதால் பெற்றோர் இயலுமானவரை முன்கூட்டியே பதியவேண்டும். இதற்குச் செலுத்தவேண்டிய கட்டணம் ஒவ்வொரு இடத்திற்கும் வித்தியாசப்படும். அதன் ஒரு பகுதியை வதியும் கிராமசபை பொறுப்பெடுக்கும். குழந்தைகள் பகல் நேரப் பராமரிப்பகம் அல்லது வதியும் கிராமசபை இங்க பதியும் வசதிகளையும் கட்டணத்தையும் அறியத்தரும்.

## விளையாட்டுக் குழுக்கள்

அதிகமான பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்ல முன்பு விளையாட்டுக் குழுக்களுக்குச் (Spielgruppe) செல்கின்றனர். கிட்டத்தட்ட 3 வயதையடைந்த பிள்ளைகள் சேர்ந்துஇ பெற்றோரின்றி ஒரு நிபுணத்துவம் பெற்ற பாதுகாப்பாளரின் கண்காணிப்புடன், விளையாடுதல் மற்றும் கைப்பணி போன்றவற்றைச் செய்வர். விளையாட்டுக்குழுக்களுக்குச் செல்லுதல் அவரவர் விருப்பத்திற்குரியது. வீட்டிலே டொச் மொழி பேசாத பிள்ளைகள் விளையாட்டுக்குழுக்களுக்குச் செல்லும்போது , அங்கு டொச் மொழித் தொடர்புக்கு நல்ல வாய்ப்பாகிறது. அதனால் பாடசாலைக்குச் செல்லும்போது இலகுவாகிறது. ஒவ்வொரு விளையாட்டுக்குழுக்களுக்கும் உரிய கட்டணங்கள் வித்தியாசப்படுவது மட்டுமன்றி இதன் ஒரு பகுதியை கிராமசபை செலுத்தும். அதிகமாக எல்லாக் கிராமசபைகளிலும் விளையாட்டுக்குழுக்கள் இருப்பது மட்டுமன்றி, இதற்குரிய கட்டணம், விண்ணப்ப வசதிகள் பற்றிக் கிராமசபை அறியத்தரும்

## நாள் கட்டமைப்பு / மதிய உணவு

பாடங்கள் இல்லாத நேரங்களிலும் கூடச் சில பாடசாலைகள் பராமரிப்பை வழங்குகின்றன. பாடசாலைகளில் நாள் கட்டமைப்பின்படி (Tagesstruktur) பிள்ளைகள் மதியஉணவைப் பாடசாலையில் உண்டு மதியம் பாடசாலையில் தங்கலாம். பாடசாலை முடிய வீட்டுப்பாடங்கள் செய்ய உதவி செய்வார்கள். இந்தச் சலுகைக்குப் பெற்றோரிடம் கட்டணம் அறவிடப்படும். இக் கட்டணம் பெற்றோரின் வருமானத்திற்கு ஏற்ப வேறுபடும். பிள்ளை இச் சலுகையை ஒன்று அல்லது மேற்பட்ட நாட்களுக்கு பயன்படுத்தலாம். நாள் கட்டமைப்பு தினப்பள்ளியிலிருந்து (Tagesschulen) வேறுபடும். தினப்பள்ளியில் பிள்ளைகள் கிழமையில் 5 நாட்களும் ஒரே மாதிரி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்ற வேண்டும்.

## பராமரிப்புக்குடும்பம்

பிள்ளைகளைப் பகலில் குறிப்பிட்ட நேரத்திற்குப் (அதிகமாகப் பகல் முழுவதும்) பொறுப்பெடுக்கும் குடும்பங்கள் (Tagesfamilien) பராமரிப்புக்குடும்பம் எனப்படும். இந்த குழந்தைகளைப் பராமரிக்கும் வசதி தொழில் புரியும் பெற்றோருக்குத் தேவையானது. இதற்கென உள்ள முகவர் நிலையங்கள் தேடுபவரின் தேவைக்கேற்ப ஒரு குடும்பத்தை ஒழுங்குபடுத்தி வழமையான கட்டணத்தையும் அறியத்தருவர்.

## குழந்தையுடன் துணையாக இருப்பவர் / அவசர சந்தர்ப்பங்கள்

சுவிஸில் அதிகமாக, இளையவர்கள்கூட மாலை நேரத்திலோ அல்லது வார இறுதி நாட்களிலோ குழந்தைகளுடன் துணையாக இருக்கும் தொழில் செய்வார்கள். அறோ சுவிஸ் செஞ்சிலுவைச்சங்கம் (SRK) இதற்கெனப் பயிற்சி பெற்று குழந்தைகளுடன் துணையாக இருப்பவர்களின் முகவர் நிலையப் பட்டியலை வைத்துள்ளது. இதில் பங்கெடுக்கும் இளையவர்களுக்கு பணம் கொடுப்பது வழக்கம். முன் திட்டமிடாத அவசர சந்தர்ப்பங்களில் திடீர் அவசரக்குழந்தைப் பராமரிப்பை சுவிஸ் செஞ்சிலுவைச் சங்கம் (SRK) செய்கிறது. உதாரணத்திற்கு பெற்றோரில் ஒருவர் வைத்தியசாலையிலி ருந்து பிள்ளையைப் பார்க்க யாருமில்லாவிடின். இப் பராமரிப்புக்கு கட்டணம் அறவிடப்படும். சில மருத்துவக் காப்புறுதிகள் இச் செலவைப் பொறுப்பெடுக்கும்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

dev.hallo-aargau.ch/ta/partnership-and-children/childcare

KANTON AARGAU

hallo — aargau.ch

# குடும்பம் ஒன்றிணைதல்

குடும்ப அங்கத்தவர் ஒருவர் சுவிஸிலிருந்து அவருடன் இணைவதற்காக சில சூழ்நிலைகளில் குடும்பமே இங்கு குடிபெயர்ந்து வருதல். உறவினர் அல்லது தெரிந்தவர் விருந்தினராக வந்து போவதற்கு அவரவர் நாட்டைப் பொறுத்து விருந்தினர் விசாவுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

## குடும்பம் ஒன்றிணைதல்

சுவிஸில் வசிப்பவருடைய குடும்ப அங்கத்தவர் (நேரடி உறவினர் அல்லது வாழ்க்கைத்துணை) சுவிசிற்கு குடி பெயர்ந்து வருவது (குடும்ப ஒன்றிணைவு, Familiennachzug) அடிப்படையில் சாத்தியப்படும். குடும்பத்தில் எந்த உறுப்பினருக்கு அனுமதி கேட்கலாம் என்பது இங்கு வசிப்பவருடைய தேசிய இனம் வதிவிட உரிமையைப் பொறுத்துள்ளது. தற்காலிக வதிவிட உரிமை (அடையாள அட்டை F) உள்ளவர்கள் சில சூழ்நிலைகளில் தமது குடும்பத்தை இங்கு வரவழைக்கலாம். மாநில குடிவரவு ஒருங்கிணைப்புத் திணைக்களம் (Amt für Migration und Integration) விண்ணப்பம் சார்ந்த தேவையான பத்திரங்களின் தகவல்களை வழங்கி ஆயத்த நடைமுறைக்கு உதவுவது மட்டுமன்றி விண்ணப்பத்தின் முடிவையும் எடுக்கும். கவனத்திற்கு குடும்ப ஒண்றிணைவு ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியுள் விண்ணப்பிக்க வேண்டும். இது பிள்ளைகளுக்கு பெரியவர்களை விடக் குறைவான கால எல்லையாக இருக்கும் (உ+மாக வாழ்க்கைத்துனை).

## கல்யாணத்திற்கு ஆயத்தம் செய்தல்

சுவிஸில் வசிப்பவர் வெளிநாட்டிலுள்ளவரை மணம் முடிக்க விரும்பினால் வெளிநாட்டில் வசிப்பவரை சுவிஸ்க்குள் வரவழைக்க ஒரு அனுமதி விசா கல்யாண ஆயத்தத்திற்கென (Vorbereitung der Heirat) விண்ணப்பிக்க வேண்டும். இந்த அனுமதியுடன் தான் வாழ்க்கைத்துணையை இந் நாட்டிற்குள் வரவழைத்து மணம் முடிக்கலாம். மாநில குடிவரவு உள்வாங்கல் திணைக்களம் (Amt für Migration und Integration) விண்ணப்பம் சார்ந்த தேவையான பத்திரங்களின் தகவல்களை வழங்கி ஆயத்த நடைமுறைக்கு உதவுவது மட்டுமன்றி விண்ணப்பத்தின் முடிவையும் எடுக்கும்.

## நுழைவு விசா

சுவிஸ் நாட்டிற்குள் வர நுழைவு விசா எடுப்பது உதாரணத்திற்கு உறவினர்களிடம் வந்து போவது கூட அதிகமான நாட்டவர்களுக்கு இலகுவான விடயமல்ல. அதற்காக சுவிஸில் வசிப்பவர்களிடமிருந்து ஒரு அழைப்பிதழ் / அல்லது செலவுகளுக்குப் பொறுப்பு (Verpflichtungserklärung) என கடிதம் எடுக்கவேண்டும். வெளிநாட்டிலுள்ள சுவிஸ் தூதரகம் விண்ணப்பம் சார்ந்த தேவையான பத்திரங்களின் தகவல்களை வழங்கி ஆயத்த நடைமுறைக்கு உதவுவது மட்டுமன்றி விண்ணப்பத்தின் முடிவையும் எடுக்கும். இதற்கான தகவல்களை மாநில குடிவரவு ஒருங்கிணைப்புத் திணைக்களத்தில் (Amt für Migration und Integration) பெறலாம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

dev.hallo-aargau.ch/ta/partnership-and-children/family-reunification

# மோதல்

குடும்பத்திற்குள்ளோ அல்லது சேர்ந்து வாழ்பவர்களிடையே மோதல் வரும் போது உதவி செய்யப் பல விதமான ஆலோசனை நிலையங்கள் உள்ளன. குடும்பத்திற் குள்ளும் சேர்ந்து வாழ்பவர்களுக்கிடையிலும் வன்முறை தடை செய்யப்பட்டுள்ளது.

## சேர்ந்து வாழ்பவர்களிடையே மோதல்

சேர்ந்து வாழ்பவர்களிடையே மோதல் ஏற்படும் போது அவர்கள் நிபுணத்துவமான உதவியை நாடலாம் (Eheberatung). விசேட ஆலோசனை நிலையங்கள் மோதலுக்கு முடிவைத் தேட உதவும். முதலாவது கலந்துரையாடல் இலவசமானது அல்லது மலிவானது. ஒவ்வொரு பிரதேசத்திற்கும் இதற்கெனப் பொறுப்பான ஆலோசனை நிலையங்கள் உண்டு.

## குடும்பத்திற்குள் மோதல்

பிள்ளைகளுள்ள குடும்பத்திற்குள் சில சமயம் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் சுமை தரக்கூடிய கடினமான சூழ்நிலைகள் வரலாம். பெற்றோரால் மேற்கொண்டு எதுவும் செய்ய முடியவில்லையானால் பெற்றோர் உதவியை நாடுவது பரிந்துரைக்கப் படுகிறது. குடும்ப ஆலோசனை நிலையத்தில் (Familienberatungsstelle) தனிப்பட்ட முறையில் ஆலோசனை கேட்கலாம். பெற்றோர் அவசர அழைப்பிற்கு Elternnotruf) தொலைபேசியில் அல்லது ஈ மெயிலில் நிபுணர்களிடம் பிள்ளை வளர்ப்புப்பற்றியும் கவலைகள் பற்றியும் ஆலோசனைகளைப் பெறலாம். (தொலைபேசி 0848 35 45 55 இலவசம், www.elternnotruf.ch)) சிறுவர்களும் இளையவர்களும் தொலைபேசி மெயில் குறுஞ்செய்தி அல்லது அரட்டை மூலம் சிறுவர்கள்; அவசர அழைப்பிற்கு (Kindernotruf) இல் நாடலாம்.( தொ.பேசி 147 (இலவசம்), www.147.ch).

## வீட்டில் வன்முறை

வீட்டில் வன்முறைகள் நடப்பது உத்தியோகபூர்வமான குற்றமாகும். எவர் வன்முறை யைச் செய்கிறாரோ அவர் தண்டணைக்குரியவர் - வன்முறையின் தன்மையைப்பொறுத்து. வன்முறை கணவனுக்கோ மனைவிக்கோ அல்லது பிள்ளைகளுக்கோ எதிரானது என்பதில் எவ்வித வித்தியாசமுமில்லை. ஒரு குடும்பத்தில் வன்முறை நடப்பதாக அறிந்து கொண்டால் நிர்வாகங்கள் செயற்பட உசாராகும். வன்முறையால் பாதிக்கப்பட்டவருக்கு இலவசமான நம்பகமான பாதுகாப்பு வசதிகள் கிடைக்கும். விசேட வதிவிடம் (Frauenhaus/ Väterhaus) இங்கு பெண்களோ அல்லது ஆண்களோ தம் பிள்ளைகளுடன் தற்காலிக பாதுகாப்பைத் தேடலாம். வன்முறையைச் சந்திக்கும் பெண்கள் எந்நேரமும் பெண்கள் காப்பகத்துடன் (தொ.பேசியில் 062 823 86 00 ) தொடர்பு கொள்ளலாம். சிறுவர்களும் இளையவர்களும் சிறுவர்கள் அவசரத்துடன் (Kindernotruf) நாட (தொ.பேசி 147 (இலவசம்), www.147.ch). எவர் ஒருவர் தன் குடும்ப அங்கத்தவரால் பயமுறுத்தப் படுவதாக உணர்ந்தால் (தொ.பேசி 117) பொலிஸை அழைக்கலாம். இதை ஒருவர் வீட்டில் இருந்து நீண்ட காலமாகப் பயமுறுத்தப்பட்டு வன்முறையை எதிர்நோக்கினாலும் செய்யலாம்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

dev.hallo-aargau.ch/ta/partnership-and-children/conflicts